DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT KUNNAM**

| | | |
|---|---|---|
| Calendar | : | STC /27 / 2021 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | மனுதாரர் தரப்பு சாட்சி 1. |
| Name : | | தங்கராசு |
| Father's/Husband Name: | | முத்துசாமி |
| Village : | | ஆய்குடி |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 78/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.01.2023

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை</u>**

1) நான் மேற்படி வழக்கில் மனுதாரர் ஆவேன். எதிரியை எனக்கு 10,12 வருடங்களுக்கு மேலாக தெரியும். 2015 ம் வருடம் டிசம்பர் மாதம் எதிரி குடும்ப செலவுக்காக என்னிடம் பணம் கேட்டதன்பேரில் நான் ரூபாய் 2 லட்சம் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். பல முறை கேட்டும் பணத்தை கொடுக்கவில்லை. 20.01.2016 ம் வருடம் எதிரி எனக்கு ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலையை கொடுத்தார். அவருடைய வெங்கடேசபுரம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா காசோலையை எதிரி எனக்கு கொடுத்தார்.
2) நான் மேற்படி காசோலையை 20.01.2016 ம் தேதி என் வங்கி கணக்கு உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா லப்பைக்குடிக்காடு கிளையில் தாக்கல் செய்தேன். மேற்படி காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டு விட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. நான் சென்று காசோலையை திரும்ப பெற்று வந்தேன். பின்னர் நான் வழக்கறிஞர் மூலம் அறிவுப்பு அனுப்பினேன். தற்போது எனது பணத்தை திரும்ப பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். (எதிரி

மனுதாரருக்கு கொடுத்த காசோலை **ம.சா.ஆ 1** ஆகவும் மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ **ம.சா.ஆ 2** ஆகவும் மனுதாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **ம.சா.ஆ 3** ஆகவும் மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதற்கான அஞ்சல் கவர் **ம.சா.ஆ 4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.) மனுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.

DMCJM KUNNAM